17.2.2015

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### பிப்.20-இல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பிப்.20-ஆம் தேதி காலை 11 மணிக்கு விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடைபெறுகிறது. மாவட்ட ஆட்சியர் ந.வெங்கடாச்சலம் தலைமையில் நடைபெறும் கூட்டத்தில், விவசாயிகள் மற்றும் விவசாயிகள் சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு தங்களது கோரிக்கைகளை தெரிவித்து தீர்வு காணலாம் என்று மாவட்டநிர்வாகம்அறிவித்துள்ளது.

### ஸ்ரீவைகுண்டத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் திறப்பு

தமிழ்நாடு நுகர்வோர் வாணிபக் கிடங்கு சார்பில் ஸ்ரீவைகுண்டத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையத் திறப்பு விழா நடைபெற்றது. விழாவுக்கு, நுகர்பொருள் வாணிபக் கழக மண்டல மேலாளர் முருகேசன் தலைமை வகித்தார். விவசாய சங்கத் தலைவர்கள் மாடசாமி, சண்முகம், சங்க முன்னாள் தலைவர் காளிராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மருதுர் மேலகால் விவசாயத் தலைவர் அலங்காரம் கொள்முதல் நிலையத்தை திறந்து வைத்தார். நிகழ்ச்சியில் தரக்கட்டுப்பாட்டு துணை மேலாளர் ராஜா, கிட்டங்கி மேற்பார்வையாளர் சுப்பிரமணியன், விவசாயிகள் ராமநாதன் பெருமாள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். இந்த கொள்முதல் நிலையத்தில், சன்ன ரக நெல் குவிண்டாலுக்கு ரூ.1,400 மற்றும் ஊக்கத்தொகை ரூ.70-ம், பொது ரக நெல் குவிண்டாலுக்கு ரூ.1,360 மற்றும் ஊக்கத்தொகை ரூ.50-ம் வழங்கப்படும் என நுகர்பொருள் வாணிபக் கழக மண்டல மேலாளர் தெரிவித்தார்.

**<u>மக்காச்சோளம் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு மானியம்</u>**

புதுக்கோட்டை மாவட்டம், குன்றாண்டார்கோவில் வட்டாரத்தில் மக்காச்சோளம் சாகுபடி மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு நீடித்த வேளாண்மை குழுமம் திட்டத்தின் கீழ் மானியம் வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து குன்றாண்டார்கோவில், வேளாண் உதவி இயக்குநர் மு. சங்கரலெட்சுமி வெளியிட்ட செய்திக் குறிப்பு: குறைந்த நீர் பாசனத்தில் அதிக மகசூல் தரக்கூடிய மக்காச்சோளம் பயிர் சாகுபடி செய்வதால், நீர்ச் சிக்கனம் செய்ய முடியும். மக்காச்சோளம் தொடர் பயிராக பயறு வகைப் பயிர்கள் சாகுபடி செய்யும் விவசாயி களுக்கு தேசிய நீடித்த வேளாண்மைக் குழுமத் திட்டத்தின் கீழ் மானியம் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, மக்காச்சோளம் சாகுபடி செய்யும் விவசாயிகள் குன்றாண்டார்கோவில் வட்டார வேளாண் விரிவாக்க மையத்தை அணுகி பயன் பெறலாம்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>பயறு வகை சாகுபடிக்குமானியம் பெற அழைப்பு</u>**

தஞ்சாவூர்:தஞ்சை மாவட்ட வேளாண் இணை இயக்குனர் சேகர் வெளியிட்ட அறிக்கை:தேசிய உணவு பாதுகாப்புத் திட்டம் பயறு வகைசாகுபடிக்கென, ஒரு ஹெக்டருக்கு, 100 ரூபாய் மதிப்புள்ள உயிர் உரங்கள், ஐந்து கிலோ பயறு வகை நுண்ணூட்டம், 500 ரூபாய் மதிப்பிலான களைக்கொல்லி, 500 ரூபாய் மதிப்பிலான பயிர் பாதுகாப்பு மருந்துகள் ஆகியவை மானிய இடுபொருள்களாக வழங்கப் படுகின்றன.மேலும், தண்ணீர் கொண்டு செல்லும் குழாய்கள், தெளிப்பான், நகரும் தெளிப்பான், மழைத்தூவான், சுழல்கலப்பை, பம்ப்செட் ஆகிய இயந்திரங்கள், 50 சத மானிய விலையில்

வழங்கப்படுகின்றன. இந்தப் பருவத்தில் பயறு வகைப் பயிர்கள் சாகுபடி செய்துள்ள விவசாயிகள், அந்த பகுதியில் உள்ள உதவி வேளாண்மை இயக்குநர் அலுவலகத்தைத் தொடர்பு கொண்டு மேலும் விவரங்களைப் பெறலாம். இவ்வாறு தெரிவித்தார்.

## காய்கறி உற்பத்தி செயல் முறை பயிற்சி

கூடலூர் : கூடலூர் விவசாயிகளுக்கு காய்கறி உற்பத்தி குறித்து செயல் முறை விளக்க பயிற்சி வழங்கப்பட்டது. கூடலூர் தோட்டக்கலை துறை, வேளாண்மை தொழிற்நுட்ப வேளாண்மை முகமை திட்டத்தின் கீழ், கூடலூர் விவசாயிகளுக்கான, காய்கறி உற்பத்தி குறித்த கள பயிற்சி முகாம் நடத்தப்பட்டது. இதன்படி, சிறு விவசாயிகள் மாங்கோடுபகுதியில் உள்ள முன்னோடி விவசாய தோட்டங்களுக்கு அழைத்து செல்லப் பட்டு,"விவசாய விளை பொருள்கள் உற்பத்தி; அமிர்த கரைசல் தயாரிப்பு; தேயிலை மற்றும் காய்கறிகள் சாகுபடி செய்வது' குறித்து விளக்கப் பட்டது.தொடர்ந்து, தோட்டமூலா பகுதியில் உள்ள விவசாய தோட்டங் களுக்கு அழைத்து செல்லப்பட்டு, "தீவனப்புல் சாகுபடி, காளான் வளர்ப்பு, இயற்கை வழியில் காய்கறி உற்பத்தி' குறித்து செயல்முறை விளக்க பயிற்சி அளிக்கப்பட்டது. இதில், மேலாண்மை முகமை திட்ட தொழில் நுட்ப மேலாளர் யமுனாபிரியா, உதவியாளர்கள் சந்தியா, பானுப்பரியா, முன்னோடி விவசாயிகள் உதயகுமார், ரதீஷ், குமரன் மற்றும் 75 விவசாயிகள் கலந்து கொண்டனர்.

## நிலக்கடலை வரத்து குறைந்ததால் மூடைக்கு ரூ.700 அதிகரிப்பு

போடி : நிலக்கடலை வரத்து குறைந்துள்ளதால் கடந்த வாரத்தை விட மூடைக்கு ரூ.700 வரை விலை அதிகரித்துள்ளது. கூடுதல் விலை கொடுத்து சிறு வியாபாரிகள் வாங்க தயக்கம் காட்டி வருகின்றனர். தேனி, திருவண்ணாமலை, ஆலங்குடி, வேதாரண்யம், திருச்செங்கோடு உள்ளிட்ட பகுதிகளில் நிலக்கடலை அதிகளவில் பயிரிடப்படுவது வழக்கம். தேனி பகுதியில் நிலக்கடலை சீசன் காலத்தில் சாகுபடி

செய்வதில் விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டவில்லை. இதனால் மாவட்டத்தில் குறைந்த பரப்பிலேயே சாகுபடி செய்யப்பட்டது. கடந்த ஆண்டு போதிய மழை பெய்ததால் விளைச்சலும் ஓரளவிற்கு இருந்தது. இருந்தபோதும் அதிக சாகுபடி பரப்பு இல்லாததால் தேவைக்கும் குறைவாகவே வரத்து உள்ளது. விவசாயிகளிடம் இருப்பு கூட இல்லாத நிலையில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. கடந்த வாரம் 80 கிலோ கொண்ட நிலக்கடலை மூடை ரூ.4 ஆயிரத்து 800 ஆக இருந்தது. தற்போது மூடை ரூ.5 ஆயிரத்து 500 ஆக உயர்ந்துள்ளது. மூடைக்கு ரூ.700 உயர்ந்துள்ளதால் கூடுதல் விலை கொடுத்து வாங்க சிறு வியாபாரிகள் தயக்கம் காட்டி வருகின்றனர்.

## <u>20ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்</u>

சேலம்,:சேலம் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில், வரும், 20ம் தேதி, காலை, 10 மணிக்கு, மாதாந்திர விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடக்கிறது. கலெக்டர் மகரபூஷணம் தலைமை வகிக்கிறார். இக் கூட்டத்தில், விவசாயிகள் அளித்த மனுக்கள் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கை பற்றி அதிகாரிகள் விளக்கம் தெரிவிக்கின்றனர்.

## <u>ரூ.1.35 கோடிக்கு பருத்தி வர்த்தகம்</u>

ராசிபுரம்: ராசிபுரம் வேளாண் கூட்டுறவு உற்பத்தி விற்பனையாளர்கள் சங்கத்தில், நேற்று, ஒரு கோடியே, 35 லட்சம் ரூபாய்க்கு பருத்தி ஏலம் நடந்தது.ராசிபுரம் வேளாண் கூட்டுறவு உற்பத்தி விற்பனையாளர் சங்கத்தின் (ஆர்.சி.எம்.எஸ்.,) கவுண்டம்பாளையம் குடோனில் பருத்தி ஏலம், நேற்று நடந்தது.சீராப்பள்ளி, சிங்காளந்தபுரம், கதிராநல்லூர், பட்டணம் வடுகம், நாமகிரிப்பேட்டை, கரடியானூர், புதுப்பாளையம், கல்யாணி உள்ளிட்ட பல்வேறு பகுதியில் இருந்து, 100க்கும் மேற்பட்ட விவசாயிகள், 8,289 பருத்தி மூட்டைகளை விற்பனைக்கு கொண்டு வந்தனர்.டி.சி.எச்., ரகம் அதிக பட்சமாக, 4,941, குறைந்த பட்சமாக, 4,166, ஆர்.சி.எச்., ரகம் அதிகபட்சமாக, 4,440, குறைந்த பட்சமாக, 3,739

ரூபாய்க்கு ஏலம் போனது.ஆத்தூர், சேலம், திருச்செங்கோடு, அன்னூர், அவிநாசி, கொங்கணாபுரம் ஆகிய பகுதியைச் சேர்ந்த, 20க்கும் மேற்பட்ட வியாபாரிகள் பருத்தியை, ஒரு கோடியே, 35 லட்சம் ரூபாய்க்கு ஏலம் எடுத்து சென்றனர்.

## முட்டை விலை 285 காசாக நிர்ணயம்

நாமக்கல்:தமிழகம் மற்றும் கேரளாவில், முட்டை கொள்முதல் விலை, 285 காசாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நாமக்கல்லில், தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு கூட்டம், நேற்று, நடந்தது. முட்டை உற்பத்தி, மார்க்கெட் நிலவரம் குறித்து பண்ணையாளர்கள் விவாதித்தனர். அதையடுத்து, முட்டை கொள்முதல் விலையில், 295 காசுகளுக்கு விற்பனை செய்யப்பட்ட முட்டை, பத்து காசு குறைந்து, 285 காசாக நிர்ணயம் செய்யப்பட்டது.நாட்டின் பிற மண்டலங்களில் முட்டை விலை (காசுகளில்) நிலவரம்:சென்னை, 330, ஹைதராபாத், 281, விஜயவாடா, 281, பர்வாலா, 282, மும்பை, 319, மைசூரு, 320, பெங்களூரு, 310, கோல்கத்தா, 340, டில்லி, 295.இவ்வாறு நிர்ணயம் செய்யப் பட்டுள்ளது.நாமக்கல்லில், நேற்று நடந்த பண்ணையாளர்கள், வியாபாரி கள் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், முட்டை கோழி விலை, ஒரு கிலோ 42 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டது. பல்லடத்தில், நடந்த கறிக்கோழி உற்பத்தியாளர் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், அதன் விலை, 63 ரூபாயாக நிர்ணயம் செய்யப்பட்டது.

## கரும்புக்கு நல்ல விலை கிடைத்ததால்நடவு செய்ய விவசாயிகள் ஆர்வம்

பென்னாகரம்:விவசாயத்தை பிரதானமாக கொண்ட தர்மபுரி மாவட்டத்தில், நெல், கரும்பு, வாழை மற்றும் மஞ்சள் சாகுபடி அதிக ஏக்கரில் பயிர் செய்யப்படுகிறது. கரும்பு சாகுபடியை பொறுத்த வரையில், மாவட்டத்தில் உள்ள பாலக்கோடு மற்றும் அரூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் முன் பதிவு செய்து விவசாயிகள் கரும்பு சாகுபடி செய்து வருகின்றனர். கருப்பு கரும்பு பத்து மாத பயிர். இதனால்,

அடுத்தாண்டு பொங்கல் பண்டிகை விற்பனையை குறி வைத்து, இறவை பாசன பகுதியில் விவசாயிகள் கருப்பு கரும்புகளை சாகுபடி செய்ய துவங்கியுள்ளனர். இங்கு உற்பத்தியாகும், கரும்புகள் பொங்கல் பண்டிகையின் போது, கோவை மற்றும் ஈரோடு மாவட்டங்களில் நல்ல வரவேற்பு இருக்கும் என்பதால், பாசன பற்றாக்குறையுள்ள நிலையிலும், வழக்கம் போல் கரும்பு சாகுபடியில் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர். மேலும், கடந்த பொங்கலுக்கு, கரும்பு விலை மற்றும் விற்பனை அமோகமாக இருந்தது.இதனால், தர்மபுரி மாவட்டத்தில், தர்மபுரி, பென்னாகரம், பாலக்கோடு தாலுகாவின் பல்வேறு பகுதிகளில், விவசாயிகள் ஆர்வத்துடன், கருப்பு கரும்பு சாகுபடியில் ஈடுபட்டுள்ளனர். கரும்புகளை நடவு செய்வதற்காக, தர்மபுரி மாவட்ட விவசாயிகள், வெளி மாவட்டங்களில் இருந்து, விதை கரும்பை வாங்கி வந்து, தங்களது வயல்களில் நடவு செய்து வருகின்றனர்.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

## இலவச காளான் வளர்ப்பு பயிற்சி

ஈரோடு, : மத்திய அர சின் கிராமப்புற அமைச்சக வழிகாட்டுதலின் படி கனரா வங்கி தொழில் பயிற்சி நிலையம் சார்பில் இலவச காளான் வளர்ப்பு பயிற்சி வருகின்ற 18ம் தேதி முதல் 24ம் தேதி வரை 6 நாட்களுக்கு ஈரோடு அசோகபுரத்தில் உள்ள ஸ்ரீ சரஸ்வதி வித்யாலயா பள்ளி வளாகத்தில் நடைபெற உள்ளது. பயிற்சியில் சேர தமிழில் எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும். வயது வரம்பு இல்லை. பயிற்சியில் சேருபவர்களுக்கு மதிய உணவு உட்பட அனைத்தும் இலவசமாக வழங்கப்பட உள்ளது. பயிற்சி முடித்தவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படும் என்றும் வறுமைகோட்டிற்கு கீழ் உள்ளவர்களுக்கு

முன்னுரிமை அளிக்கப்படும் என்றும் கனரா வங்கி முதுநிலை மேலாளர் பூபாலன் தெரிவித்துள்ளார்.

## விவசாயிகள் சங்க கூட்டம்

கோவை: கோவை மாவட்ட விவசாயிகள் சங்கத்தின் மாதாந்திர செயற்குழு கூட்டம் விவசாயிகள் சங்கத்தின்தலைவர் வழுக்குப்பாறை பாலு தலைமையில் பொதுச்செயலாளர் கந்தசாமி முன்னிலையில் நடந்தது. கூட்டத்தில், 'விவசாய இடு பொருட்கள் கொள்முதல் குழு மாவட்ட அளவில் கலெக்டர் தலைமையில் அமைக்கப்பட்டு தரமான இடுபொருட்கள் நியாயமான விலைக்கு கொள்முதல் செய்து விவசாயிகளுக்கு வினியோகிக்கப்பட வேண்டும் என வேளாண் ஆணையர் உத்தரவிட்டு இருந்தும் சந்தை விலையை விட கூடுதல் விலைக்கு கொள்முதல் செய்யப் பட்டுள்ளது கண்டிக்கத் தக்கது. விவசாயி களுக்கு மானிய விலையில் மத்திய மாநில அரசுகள் வழங்குகின்ற உரங்கள் விவசாயம் அல்லாத காரியங்களுக்கு அண்டை மாநிலங்களுக்கு கடத்தப்படுவது குறித்து பல முறை புகார் அளிக்கப்பட்டுள்ளது. இது குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் தஞ்சையில் இருந்து தவிட்டு மூட்டைகளுக்கு அடியில் லாரிகள் மூலம் கோவை,பொள்ளாச்சி வழியாக கேரளாவிற்கு உரம் கடத்தப்படுவதை கண்காணித்து நடவடிக்கை எடுக்க வேண்டும்' என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## 473 விவசாயிகளுக்கு ரூ35.26 லட்சத்தில் இடுபொருட்கள்

ஊட்டி, : நீலகிரி மாவட்ட தோட்டக்கலைத் துறை சார்பில் ஊட்டியில் நடைபெற்ற விழாவில் 473 விவசாயிகளுக்கு ரூ.35.26 லட்சம் மதிப்பிலான இடுபொருட்கள் மற்றும் உபகரணங்கள் விவசாயிகளுக்கு மாவட்ட கலெக்டர் சங்கர் வழங்கினார்.நீலகிரி மாவட்ட தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை சார்பில் விவசாயிகளுக் கான இடு பொருட்கள் மற்றும் உபகரணங்கள் வழங்கும் விழா ஊட்டி அண்ணா கலையரங்கில் நடந்தது. இதில் தோட்டக்கலை இணை இயக்குநர் மணி வரவேற் றார். தாட்கோ தலைவர் கலைச் செல்வன், ராஜ்ய சபா எம்.பி.,

அர்ஜுணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் மாவட்ட கலெக்டர் சங்கர், பயனாளிகளுக்கு உயர் தர விதைகள், இடுபொருட்கள் மற்றும் உபகரணங்களை வழங்கி பேசியதாவது: தமிழக அரசு மற்ற மாநிலங்களை காட்டிலும் விவசாயத்திற்கு அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறது. குறிப்பாக விவசாயிகளுக்கு உபகரணங்கள், உரம், விரிய ரக விதைகள் உள்ளிட்ட இடுபொருட்கள் போன்றவற்றை மானிய விலையில் வழங்கி வருகிறது. நீலகிரி மாவட்டத்தில் தோட்டக்கலைத்துறை மூலம் கொய் மலர் சாகுபடிக்கு பசுமை குடில் அமைக்க 1 சதுர மீட்டருக்கு ரூ.470.70 என ஒரு ஏக்கருக்கு ரூ.18.7 லட்சம் மானியமாக வழங்கப் படுகிறது. மேலும் பசுமை குடில் மூலம் காய்கறி உற்பத்தி செய்ய ஒரு ஏக்கருக்கு ரூ.12 லட்சம் மானி யம் வழங்கப்படுகிறது. கடந்த 2 ஆண்டுகளில் மலைப்பகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் நீலகிரியில் விவசாயிகளுக்கு விதைகள், உபகரணங்கள், இடுபொருட்கள் போன்றவைகளுக் காக ரூ.8.5 கோடி வழங்கப்பட்டுள்ளது. விவசாய தொழிலாளர்களின் குழந்தைகளின் கல்விக்காக கடந்த 4 ஆண்டுகளில் 365 லட்சம் வழங்கப்பட்டுள்ளது. எனவே, தமிழக அரசு மூலம் விவசாயத்திற்காக வழங்கப்படும் நலத்திட்டங்களை விவசாயிகள் பயன்படுத்தி கொள்ள வேண்டும்.இவ்வாறு அவர் பேசி னார். விழாவில், மலைப்பகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 50 சதவீத மானிய விலையில் ரூ.24.48 லட்சம் மதிப்பில் 153 ஆயில் இன்ஜின்கள், ரூ.1.11 லட்சம் மதிப்பில் 74 கைத்தெளிப்பான்கள், ரூ.2.48 லட்சம் மதிப்பில் 70 விசை தெளிப்பான்கள் வழங்கப்பட்டன. 120 விவசாயிகளுக்கு அம் மா பண்ணை திறன் மேம் பாட்டு திட்ட சுழல் நிதி ரூ.60 ஆயிரம் மற்றும் பண்ணை நீர் நிர்வாக திட்டத்தின் கீழ் 5 விவசாயிகளுக்கு ரூ.1.01 லட்சம் வழங்கப்பட்டது. பெருநகர காய்கறி தொகுப்பு வளர்ச்சி திட்டத்தின் கீழ், காய்கறி சாகுபடி பரப்பு விரிவாக்கத்தின் கீழ் 46 விவசாயிகளுக்கு ரூ.2.48 லட்சம் மானியத்திற்கான காசோ லையும், ஒருங்கிணைந்த தோட்டக் கலை வளர்ச்சி இயக்க திட்டத்தின் கீழ் பசுமை குடில் அமைத்த

விவசாயிகளுக்கு ரூ.2.60 லட்சம் மானியத்திற்கான காசோலையும், இஞ்சி பரப்பு விரிவாக்கத்தின் கீழ் 2 விவசாயிகளுக்கு 7.20 எக்டருக்கு ரூ.76 ஆயிரம் மானியத்திற்கான காசோ லையும் மற்றும் விதைகள் உள்ளிட்ட இடுபொருட்கள் என இவ்விழாவில் மொத்தம் 473 விவசாயிகளுக்கு ரூ.35.26 லட்சம் மதிப்பிலான இடுபொருட்கள் மற்றும் விதைகள் மானிய விலையில் நேற்று வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில், தமிழ்நாடு ஆவின் இணைய தலைவர் மில்லர், குன்னூர் நகராட்சி தலைவர் சரவணகுமார், ஊட்டி நகராட்சி தலைவர் சத்தியபாமா, தோட்டக்கலை உதவி இயக்குநர்கள் ராம்சுந்தர், உமா ராணி உட்பட பலர் கலந்து கொண்டனர். முடிவில் உதவி இயக்குநர் மீராபாய் நன்றி கூறினார்.

## துறையூரில் 18ம்தேதி பருத்தி ஏலம்

திருச்சி, : துறையூரில் வரும் 18ம்தேதி பருத்தி மறைமுக ஏலம் நடைபெறுகிறது. திருச்சி மாவட்டம் துறையூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் கடந்த வருடம் முதல் பருத்தி மறைமுக ஏலம் தொடங்கப் பட்டது. இதேபோல் இவ்வருடம் தற்போது பருத்தி அறுவடை துவங்கியுள்ளதால் ஒவ்வொரு வாரமும் புதன்கிழமைதோறும் துறையூரில் மறைமுக ஏலம் நடை பெற்றுவருகிறது. இந்த வாரம் வருகிற 18ம்தேதி நடைபெறும் மறைமுக ஏலத்தில் துறையூர், உப்பிலியபுரம், தா.பேட்டை, முசிறி, மண்ணச்சநல்லூர் வட்டாரங்களில் பருத்தி அறுவடை செய்து கொண்டிருக்கும் விவசாயிகள், துறையூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்திற்கு வந்து, மறைமுக ஏலம் மூலம் நல்ல விலை பெற்று பயன் பெறலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## திருச்செந்துறையில் வாழைத்தார் பொது ஏலம்

திருச்சி, : திருச்செந்துறை வணிக வளாகத்தில் நாளை வாழைத்தார் பொது ஏலம் நடை பெறுகிறது. திருச்சி வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை சார்பில் ஸ்ரீரங்கம் தாலுகா திருச்செந்துறையில் இயங்கி வரும் ஒருங்கிணைந்த வாழை வணிக வளாகத்தில் வாழைத்தார் பொது

ஏலம் நாளை (செவ்வாய்) நடை பெறுகிறது. இந்த பொது ஏலத்தில் விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைப்ப தோடு எந்தவித கமிஷனுமின்றி அவர்களுக்கு உடனுக்குடன் பணமும் பட்டுவாடா செய்யப்படுகிறது. வாழைத்தார் கொண்டு வரும் விவசாயிகள் அன்று காலை 11 மணிக்குள் முன்பதிவு செய்ய வேண்டும். திருச்சி மாவட்டம் அந்தநல்லூர், மணிகண்டம், திருவெறும்பூர், லால்குடி, மண்ணச்சநல்லூர், முசிறி, தொட்டியம் வட்டாரங்களை சேர்ந்த விவசாயிகள் மட்டுமல்லாமல் டெல்டா மாவட்ட விவசாயிகளும் வாழைத்தார்களை திருச்செந்துறை ஒருங்கிணைந்த வாழை வணிக வளாகத்துக்கு கொண்டு வந்து பொது ஏலத்தில் பங்கேற்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.காவிரி பாதுகாப்பு இயக்கத்தினர்

## <u>மக்காச் சோளம் சாகுபடியால் உணவு உற்பத்தியை பெருக்கலாம்</u>

புதுக்கோட்டை, : அதிக மகசூலைத் தரும் மக்காச் சோளம் சாகுபடி மூலம் உணவு உற்பத்தியை பெருக்குமாறு வேளாண் உதவி இயக்குநர் சங்கரலட்சுமி கேட்டுக்கொண்டுள்ளார். இதுகுறித்து அவர் கூறியதாவது: புதுக்கோட்டை மாவட்டம், குன்றாண்டார்கோயில் வட்டாரத்தில் உள்ள விவசாயிகள் மக்காச் சோளத்தை சாகுபடி செய்து உணவு உற்பத்தியை பெருக்க வேண் டும். குன்றாண்டார்கோயில் வட்டாரத்தில் தற்போது கிணற்றுப் பாசனம் மூலம் சாகுபடி செய்து வரும் விவசாயிகள் குறைந்த நீர் பாசனத்தில் அதிக மகசூலைத் தரக்கூடிய மக்காச்சோளத்தை சாகுபடி செய்ய வேண்டும். அவ்வாறு செய் தால், நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்திக் கொள்ள முடிவதோடு உணவு உற்பத்தியையும் பெருக்கிக் கொள்ளலாம். குறிப்பாக, ஒரு ஏக்கர் நெல் சாகுபடி செய்திட ஆகும் நீரைப் பயன்படுத்தி 3 ஏக்கர் மக்காச்சோளம் சாகுபடி செய்வதன் மூலம் உணவு உற்பத்தியை பெருக்க முடியும். மேலும், மக்காச்சோளம் தொடர் பயிராக பயறு வகைப் பயிர்கள் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு தேசிய நீடித்த வேளாண் குழுமத் திட்டத்தின் கீழ் மானியம் வழங்கப்பட்டு வருகிறது.எனவே, விவசாயிகள் மேலும் விவரங்களை

குன்றாண்டார்கோயில் வட்டார வேளாண் விரி வாக்க மையத்தை அணுகி தெரிந்துகொண்டு பயன்பெறலாம் என்றார்.

## நீதிமன்ற உத்தரவின்படி 74 விவசாயிகளுக்கு ரூ.12 லட்சம் பயிர் இழப்பீட்டு தொகை

தரங்கம்பாடி, :பொறையார் அருகே உள்ள இலுப்பூர் ஊராட்சியில் 2008ம் ஆண்டு பயிர் இழப்பீடு தொகை வழங்கப்படாத 74 விவசாயிகளுக்கு நீதிமன்ற உத்தரவின்பேரில் ரூ.12 லட்சத்து 19,992 இழப்பீட்டுத்தொகை நேற்று வழங்கப்பட்டது. கடந்த 2008ம் ஆண்டு இலுப்பூர் ஊராட்சியில் பயிர் காப்பீட்டு திட்டத்தில் 74 விவசாயிகள் பிரிமீயம் கட்டி இருந்தனர். அவர்களுக்கு பயிர் இழப்பீட்டு தொகை வழங்கப்படவில்லை. அதை எதிர்த்து வீரசோழன் உழவர் மன்றத்தின் தலைவர் சின்னப்பிள்ளை நுகர்வோர் நீதிமன்றத்தில் 74 விவசாயிகளின் சார்பிலும் வழக்கு தொடுத்தார். வழக்கில் 75 விவசாயிகளுக்கும் இழப்பீடு வழங்க தீர்ப்பு கூறப்பட்டது. ஆனால் நல்லாடை கூட்டுறவு வேளாண் வங்கி உயர்நீதி மன்றத்தில் மேல்முறையீடு செய்தது. வழக்கை விசாரித்த உயர்நீதிமன்றம் 74 விவசாயிகளுக்கும் பயிர் இழப்பீடு தொகை வழங்க 2014ல் தீர்ப்பளித்தது. நீதிமன்றத்தின் தீர்ப்பை நல்லாடை வேளாண் கூட்டுறவு வங்கி உடன் அமல் படுத்த அரசு உத்தரவிட்டது. அதன்படி, நேற்று 74 விவசாயிகளுக்கும் ரூ.12 லட்சத்து 19,992 பயிர் இழப்பீடு தொகையை பூம்புகார் எம்எல்ஏ பவுன்ராஜ் விவசாயிகளுக்கு வழங்கினார். நல்லாடை தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கி தலைவர் ரவி, செயலாளர் ஜோதி மற்றும் வங்கி இயக்குனர்கள் உடனிருந்தனர்.

## விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்க புதிய வேளாண் அறிவியல் மையம் துணைவேந்தர் தகவல்

காரைக்குடி, : விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்க தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் சார்பில் அரசின் நிதி உதவியுடன் புதிய வேளாண் அறிவியல் மையம் துவங்குவதற்கான நடவடிக்கைகள்

மேற்கொள்ளப்பட்டு வருகிறது என துணைவேந்தர் திலகர் தெரிவித்தார். காரைக்குடி அருகே குன்றக்குடியில் அறிவியில் ஆலோசனை குழு கூட்டம் நடந்தது. இதில் கலந்து கொண்ட தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக துணைவேந்தர் திலகர் கூறுகையில், தமிழகத்தில் வேளாண்மைக்கு அடுத்தபடியாக கால்நடை வளர்ப்பு உள்ளது. பருவமழை கைவிடும் நேரத்தில் கால்நடை வளர்ப்பு தான் விவசாயிகளின் வாழ்வாதாரமாக உள்ளது. தமிழகத்தில் வேளாண் மைக்கு அடுத்தபடியாக கால்நடைவளர்ப்பு உள்ளது. பருவமழை கைவிடும் காலங்களில் கால்நடை வளர்ப்பே விவசாயிகளின் பொருளாதர தேவைகளை பூர்த்திசெய்ய உதவுகிறது. இந்தியாவில் 52 கோடியே 96 லட்சம் கால்நடைகள் உள்ளன. 64 கோடியே 88 லட்சம் பறவைஇனங்கள் உள்ளன. தமிழகத்தை பொறுத்தவரை 3 கோடியே 7 லட்சம் கால்நடைகளும், 1 கோடியே 28 லட்சம் பறவைகளும் உள்ளன. தமிழகம் கோழி உற்பத்தியில் இந்தியஅளவில் 2வது இடமும், கறவை மாடு வளர்ப்பில் 9 தாவது இடத்திலும் உள்ளது. தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் சார்பில் குன்றக்குடி உள்பட 3 இடங்களில் வேளாண் அறிவியல் நிலையங்களில் அனைத்து துறை சார்ந்த வல்லுநர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இங்கு விவசாயிகளுக்கு தேவையான பயிற்சி, தொழிநுட்ப ஆய்வுகள், நிலையான வருமானம் உருவாக்குதல் உள்பட பல்வேறு செயல்பாடுகள் நடைபெறுகிறன. அதேபோல் 21 மாவட்டங்களில் பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையங்கள் உள்ளன. அரசின் நிதி உதவியுடன் புதிய அறிவியில் மையங்கள் உருவாக்கவும், மாவட்ட அளவில் பயிற்சி மையங்கள் உருவாக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த இரண்டு மையங்கள் தான் விவசாயிகளுடன் நேரடி தொடர்பு வைத்திருக்கும். விவாசாயிகளின் பொருட்களை மதிப்பூட்டிய பொருட்களாக எப்படி மாற்றி வருமானத்தை அதிகரிப்பது, உற்பத்தி செய்த பொருட்களை இடைத்தரகர்கள் இன்றி நேரடியாக

சந்தைப்படுத்துதல், காலங்கள், பருவமழைக்கு ஏற்ப புதிய தொழில்நுட்பங்களை கையாளுவது, கால்நடைகளின் உற்பத்தி அதிகரிப்பது, தடுப்பூசி, குடல்புழு நீக்கம் குறித்து விளக்கப்படுகிறது. பல்கலைக்கழகம் சார்பில் விவசாயிகளுக்கு ஒருவாரம், ஒரு மாதம் என பல்வேறு பட்டய படிப்புகள் நடத்தப்படுகிறது. கோமாரி நோய் தடுப்புக்கு முன்எச்சரிக்கை நடவடிக்கை எடுக்கப்பட்டதால் கடந்தகாலங்களில் கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. கால்நடை பல்கலைக்கழகத்திற்கு உலகஅளவில் அங்கீகாரம் பெறம் வகையில் பட்டதாரிகளை உருவாக்க வேண்டும், பிளஸ் 2 முடித்த மாணவர்க்கு வேலைவாய்ப்பு உருவாக்க கூடிய வகையிலான பட்டய, சான்றிதழ் படிப்புகள் துவங்குதல், விவசாயிகளுக்கு தகுந்த வருமானம் வரக்கூடிய தொழில்நுட்பங்களை வீடுகளுக்கு கொண்டு செல்லுதல் மற்றும் கிராமப்புற மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த கூடிய திட்டங்களை செயல்படுத்தல் என்ற இலக்குடன் செயல்பட்டு வருகிறோம் என்றார். இணைபேராசிரியர் செந்தில்குமார் உள்பட பலர் உடன் இருந்தனர்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**அந்தியூர் ஒழுங்குமுறைக்கூடத்தில் ரூ.65¼ லட்சத்துக்கு விவசாய விளைபொருட்கள் விற்பனை**



அந்தியூர் ஒழுங்குமுறைக்கூடத்தில் ரூ.65¼ லட்சத்துக்கு விவசாய விளைபொருட்கள்விற்பனைஆனது.

விவசாயவிளைபொருட்கள்

அந்தியூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் விவசாய விளைபொருட்கள் ஏலம் நடந்தது. இந்த ஏலத்துக்கு விவசாயிகள்

விவசாய விளைபொருட்களை கொண்டு வந்து இருந்தனர். தேங்காய்கள் மொத்தம் 25 ஆயிரம் கொண்டு வரப்பட்டு இருந்தன. இதில் சிறிய தேங்காய் ஒன்று 6 ரூபாய் 50 காசுக்கும், பெரிய தேங்காய் ஒன்று 18 ரூபாய்க்கும் ஏலம் போனது. மொத்தம் ரூ.3 லட்சத்துக்கு தேங்காய் விற்பனை ஆனது. கொப்பரை தேங்காய் 120 மூட்டைகள் கொண்டு வரப்பட்டு இருந்தன. இது (குவிண்டால்) ரூ.8ஆயிரத்து 459 முதல் ரூ.9ஆயிரத்து 536 வரை ஏலம் போனது. மொத்தம் ரூ.4½ லட்சத்துக்கு கொப்பரைதேங்காய்விற்பனைஆனது.

பருத்தி

வெள்ளை எள் 15 மூட்டைகள் கொண்டு வரப்பட்டு இருந்தன. இது (குவிண்டால்) 7 ஆயிரத்து 219 ரூபாய் முதல் 9 ஆயிரத்து 129 ரூபாய் வரை ஏலம் போனது. மொத்தம் ரூ.75 ஆயிரத்துக்கு எள் விற்பனை ஆனது. ஆமணக்கு 9 மூட்டைகள் கொண்டு வரப்பட்டு இருந்தன. இது (குவிண்டால்) ரூ.3 ஆயிரத்து 729 முதல் ரூ.4 ஆயிரத்து 809 வரை ஏலம் போனது. மொத்தம் ரூ.35 ஆயிரத்துக்கு எள் விற்பனை ஆனது. பி.டி. காட்டன் பருத்தி 3 ஆயிரம் மூட்டைகள் கொண்டு வரப்பட்டு இருந்தன. இது (குவிண்டால்) ரூ.3 ஆயிரத்து 800 முதல் ரூ.4 ஆயிரத்து 200 வரை ஏலம் போனது. மொத்தம் ரூ.18 லட்சத்துக்கு பருத்தி விற்பனை ஆனது. பாசிப்பயிறு,துவரை, நரிப்பயிறு 45 மூட்டைகள் கொண்டு வரப்பட்டு இருந்தன. இது (குவிண்டால்) 5 ஆயிரத்து 115 ரூபாய் முதல் 5 ஆயிரத்து 452 ரூபாய் வரை ஏலம் போனது. மொத்தம் ரூ.2 லட்சத்துக்கு நரிப்பயிறு விற்பனை ஆனது. பாசிப்பயிறு 35 மூட்டைகள் கொண்டு வரப்பட்டு இருந்தன. இது (குவிண்டால்) ரு.7 ஆயிரத்து 619 முதல் ரூ.8 ஆயிரத்து 551 வரை ஏலம் போனது. மொத்தம் ரூ.1 லட்சத்து 60 ஆயிரத்துக்கு விற்பனைஆனது.

துவரை 600 மூட்டைகள் கொண்டு வரப்பட்டு இருந்தன. இது (குவிண்டால்) 5 ஆயிரத்து 149 ரூபாய் முதல் 5 ஆயிரத்து 750 ரூபாய்

வரை ஏலம் போனது. மொத்தம் ரூ.30 லட்சத்துக்கு துவரை விற்பனை ஆனது.

ரூ.65¼லட்சத்துக்குவிற்பனை

மக்காச்சோளம் 150 மூட்டைகள் கொண்டு வரப்பட்டு இருந்தன. இது (குவிண்டால்) ரூ.1,150 முதல் ரூ.1,203 வரை ஏலம் போனது. மொத்தம் ரூ.2 லட்சத்துக்கு மக்காச்சோளம் விற்பனை ஆனது. நிலக்கடலை 240 மூட்டைகள் கொண்டு வரப்பட்டு இருந்தன. இதில் (காய்ந்தது) (குவிண்டால்) ரூ.3 ஆயிரத்து 811 முதல் ரூ.4 ஆயிரத்து 200 வரை ஏலம் போனது. நிலக்கடலை (பச்சை) (குவிண்டால்) ரூ.2 ஆயிரத்து 989 முதல் ரூ.3 ஆயிரம் வரை ஏலம் போனது. மொத்தம் ரூ.18 லட்சத்துக்கு நிலக்கடலை விற்பனை ஆனது. இந்த ஏலத்தில் விவசாய விளைபொருட்கள் மொத்தம் 65 லட்சத்து 20 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனை ஆனது.

## 8,289 மூட்டை பருத்தி ரூ.1 கோடியே 35 லட்சத்துக்கு ஏலம்



ராசிபுரத்தில், 8,289 மூட்டை பருத்தி ரூ.1 கோடியே 35 லட்சத்துக்கு ஏலம் போனது.

பருத்திஏலம்

நாமக்கல் மாவட்டம் ராசிபுரம் வேளாண்மை கூட்டுறவு உற்பத்தி விற் பனையாளர்கள் சங்கத்தின் (ஆர்.சி.எம்.எஸ்.) சார்பில் ராசிபுரம் அருகே உள்ள கவுண் டம்பாளையம் குடோனில் திங்கட்கிழமை தோறும் பருத்தி ஏலம் நடைபெற்று வருகிறது. நேற்று நடந்த ஏலத்தில் அன்னூர், திருச் செங்கோடு, அவிநாசி, கொங்கணாபுரம் உள்ளிட்ட பல்வேறு ஊர்களைச் சேர்ந்த ஏராளமான வியாபாரிகள் கலந்து கொண்டனர். ரகசிய டெண்டர் முறையில் நடந்த இந்த ஏலத்திற்கு சீராப்பள்ளி, சிங்காளந்தபுரம், கதிராநல்லூர், பட்டணம், வடுகம், நாமகிரிப்பேட்டை, கரடியானூர்,

புதுப்பாளையம், கல்யாணி உள்ளிட்ட பல்வேறு ஊர்களில் இருந்து 100-க்கும் மேற்பட்ட விவசாயிகள் 8,289 பருத்தி மூட்டைகளை ஏலத்திற்கு கொண்டுவந்துஇருந்தனர்.

ரூ.1கோடியே35லட்சத்துக்குவிற்பனை

இதில் டி.சி.எச். ரகம் 5,449 மூட்டைகள் ஏலத்திற்கு வந்து இருந்தது. இதில் இந்த ரகம் குறைந்தபட்சம் ஒரு குவிண்டால் ரூ.4 ஆயிரத்து 166 முதல் அதிகபட்சமாக ரூ.6 ஆயிரத்து 941-க்கு ஏலம் போனது. இதே போல் ஆர்.சி.எச். ரகம் 2,840 மூட்டைகள் ஏலத் திற்கு வந்து இருந்தது. இதில் இந்த ரகம் குறைந்தபட்சம் ஒரு குவிண்டால் ரூ.3 ஆயிரத்து 739 முதல் அதிகபட்சமாக ரூ.4 ஆயிரத்து 440-க்கு ஏலம் போனது. மொத்தம் 8,289 மூட்டை பருத்தி ரூ.1 கோடியே 35 லட்சத்துக்கு ஏலம் போனதாக விவசாயிகள் தெரிவித்தனர்.